# நீலபத்மநாபனின் சமுதாயப் பார்வை

***தா. சலீனா***
தமிழ்த்துறை
நேசமணி நினைவுக் கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம்

மலர்: 11

சிறப்பிதழ்: 1

மாதம்: ஏப்ரல்

வருடம்: 2024

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7900

***ஆய்வுச் சுருக்கம்***

*நீல பத்மநாபன் எழுதிய இலை உதிர்காலம் நாவலை மையப்படுத்தி இக்கட்டுரை அமைந்துள்ளது. வீரமும், சமூக உணர்வம் கொண்ட நாவல்களே வாசகர்களிடம் சிறப்பிடம் பெறுகின்றன. ஆனால் அண்மைக்கால நாவல்களில் யதார்த்தமான சித்தரிப்பு இடம் பெறுவதற்கு பாத்திரங்கள் வாயிலாக அமைகின்றன. நாவல் இடம் பெறும் பாத்திரங்களோடு நாவல் எழுந்த விதம், நாவலின் கதை அமைப்பு, உணர்ச்சி, கற்பனை வடிவம் போன்றவை சிறப்பிடம் பெற்றால் தான் நாவலும் சிறப்பிடம் பெற முடியம். சமூக பிரச்சனைகளை மைய பொருளாகப் பேசும் நிலைக்கு மாறிவிட்டது. இன்றைய சமூகம் எங்கு போய் கொண்டிருக்கிறது என்பதைக் காட்டும் ஒரு காலக்கண்ணாடியாகவும் திகழ்கிறது. மக்களின் வாழ்வியலை தமது நாவலின் மூலம் வெளிப்படுத்தும் நாவலாசிரியர்களுள் நீலபத்மநாபனும் ஒருவர். மேலும் சமுதாயத்தில் முதியோர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள், பாத்திரங்களின் குணநலன்கள், வாழ்க்கைப் பார்வை முதலியவற்றை இக்கட்டுரையில் அமைந்துள்ளது.*

## முன்னுரை

நீல பத்மநாபன் பல நாவல்களை எழுதியுள்ளார். இதில் இலையுதிர்காலம் என்ற நாவலுடைய போக்கு சமுதாய போக்காகவே உள்ளன. சமுதாயத்தில் காணப்படுகிற நிலைமையை அவரது இலையுதிர்காலம் என்ற நாவல் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. தற்காலத்தில் நிலவி வருகின்ற சமுதாய மாற்றங்கள் இலையுதிர்காலம் நாவல் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

## சமுதாயப்போக்கு

இலக்கியமும், சமுதாயமும்
வருவாயின்மை
உறைவிடமின்மை
கல்வி
அனாதைகள்
தொழில் நஷ்டம்
சோம்பேறி தனம்
திருத்தலங்களுக்கு செல்லுதல்
நோய்
மனவேதனை

### இலக்கியமும் சமுதாயமும்

"சமுதாயம் என்ற சொல் அரசியல், பொருளாதாரம், கலை. கலாச்சாரம், நாகரீகம், இனம், மதம், பண்பாடு, சாதிப்பாகுபாடுகள், கொள்கைகள், நம்பிக்கைகள், குடும்ப வாழ்க்கை, பழக்க வழக்கங்கள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிக் காட்டுவது" என்று இராமலிங்கம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சமுதாயத்தைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடியாக இலக்கியம் திகழ்கிறது.

சமுதாயத்தில் ஏற்படும் இன்னல்களைச் சுட்டிக்காட்டுவது இலக்கியத்தின் கடமையாக உள்ளது. இலக்கியங்களின் மூலம் சமுதாயத்தின் வாழ்வு. இலட்சியம். நாகரிகம் போன்றவைகளை அறிந்து கொள்ள முடிகிறது. சமுதாயத்தில் தனிமனிதனின் பங்கு மிக முக்கியமானது.

### வருவாயின்மை

குடும்பங்களுக்கு போதிய வருவாயின்மையை வறுமைக்கு அடிப்படை காரணமாக அமைகிறது. காலம் மாற மாற தேவைகளும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. தேவைகளை நிறைவேற்ற வருவாய் வேண்டும்.

சாதாரண நடுத்தரக் குடும்பங்களைப் பொறுத்தவரை ஒருவர் உழைத்தே குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற நிலை உள்ளது.

இக்காலக் கட்டத்தில் தனிமனித வருவாயைக் கொண்டு குடும்ப தேவைகளை நிறைவேற்ற முடியாது. நீல பத்மநாபனின் இலையுதிர்காலம் என்ற நாவலிலும் ஹரி தனிமனிதனாக நின்று உழைத்து பார்க்கிறார். தனது பிள்ளைகளின் படிப்பு செலவினையும் தனது தங்கையின் திருமண செலவுகளையும் கவனிப்பதாலும் போதிய வருமானம் இல்லாமல் அவதிப்படுகிறான். இக்கூற்று இன்றைய கால கட்டத்தில் பல குடும்பங்களுக்கு பொருந்தியதாகவே அமைகிறது.

### உறைவிடமின்மை

உணவு. உடை. உறைவிடம் என்ற மூன்றுமே மனிதவாழ்க்கைக்கு அடிப்படைத் தேவைகளாகும். ஆதிகாலத்தில் மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினான். இயற்கையிலிருந்து மாறுப்பட்ட போது அவனுக்கு குளிரிலிருந்தும். வெயிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ள வீடு தேவைப்பட்டது.

இலை உதிர் காலம் நாவலில் ராமலட்சுமி அம்மாள் தங்கியிருந்த வீட்டை தனது நெருங்கிய உறவுகாரனுக்கு கொடுத்து விட்டு உறைவிடமின்றி தவிப்பதை இந்நாவல் சுட்டிக்காட்டுகிறது.

### கல்வி

தாய். தந்தையரீகள் கஷ்டப்பட்டு தனது பிள்ளைகளை படிக்க வைத்து பெரிய நிலைமைக்கு கொண்டு வருகிறார்கள். படித்த இளைஞரீகள் தங்கள் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் தேடி தனது சொந்த நாட்டை விட்டு வெளிநாட்டிற்குச் செல்கிறார்கள். தனது நாட்டையும் தனது பெற்றோர்களையும் மறந்து அங்கேயே தங்கி விடுகின்றனர். இதனால் பெற்றோர்கள் கவனிக்க யாரும் இல்லாத காரணத்தால் அவரீகள் அனாதைகள் ஆகி முதியோர் இல்லம் தேடி அலைகிறார்கள்.

இலை உதிர்காலம் என்ற நாவலில் ராகவனுடைய மகனும். மகளும் வெளிநாட்டிற்கு வேலைக்குச் செல்வதால் தனது பெற்றோரை கவனிக்க முடியாமல் விடுதியில் கொண்டு விட்டு செல்கின்றனர். இந்நிலை இன்னும் சமுதாயத்தில் அதிகமாகவே காணப்படுகிறது.

### தொழில் நஷ்டம்

இன்றைய சமுதாயத்தில் மக்கள் பல தொழில்களைச் செய்து வருகின்றனர். இதில் சிலர் சுய தொழில்களைச் செய்கின்றனர். அவ்வாறு சுய தொழில்களைச் செய்யும் போது தொழிலில் போதிய வருமானம் இல்லாததால் தொழில் நஷ்டம் அடைகின்றனர்.

நீலபத்மாபனின் இலை உதிர்காலம் என்ற நாவலில் வரும் சேதுபதி ஜவுளி வியாபாரம் செய்து குடும்பத்தைக் கவனித்து வருகிறான். தன்னுடைய தொழிலை தன்

பிள்ளைகள் செய்வதற்கும் சொல்லிக் கொடுத்தும் சரியாக செய்யாததால் தொழில் நஷ்டம் ஏற்படுகிறது. இதனால் சேதுபதி எல்லா சொத்துக்களையும். பணத்தையும் இழக்க நேரிடுகிற மாதிரி இன்றைக்கும் பலர் சுயதொழில்களின் வாயிலாக தாங்கள் நினைத்த வருமானத்தை ஈட்ட முடியாமல் தொழில் நஷ்டம் அடைவதை சமுதாயத்தில் காண முடிகிறது.

### சோம்பேறித்தனம்

சமுதாயத்தில் இன்னும் மக்கள் உழைக்காமல் வாழ்ந்து வருகின்றனர். உழைக்க மனமில்லாத எவரும் உண்ணலாகாது என்பது போன்று இன்னும் பலர் வேலையில்லாமல் மனம் வருந்தி வாழ்க்கையை சீரழித்து கொள்வதை சமுதாயத்தில் காண முடிகிறது.

இலை உதிர்காலம் என்ற நாவலில் நல்ல சிவத்தின் மகன் பட்டப்பிடிப்பு முடிந்தும் எந்த வேலைக்கும் போகாமல் தந்தையின் பணத்தில் சாப்பிடுவதும். தகப்பனாரின் குறைகளைச் சுட்டிக்காட்டுபவனாகவும் இருக்கிறான். இப்படி பொறுப்புகள் இல்லாமல் வாழ்க்கை நடத்தியதைத் தம் நூலில் ஆசிரியர் எடுத்துக் கூறுகிறார்.

திருத்தலங்களுக்கு செல்லுதல்

வயது முதிர்ந்தவர்கள் தனது கடமைகளை முடித்துவிட்டு மன அமைதிக்கும். சந்தோஷத்திற்கும். நிம்மதிக்கும் வேண்டி புண்ணிய தலங்களைத்தேடி செல்வது வழக்கம். அங்குச் சென்றால் அவர்களுக்கு மன நிம்மதி கிடைக்கும் என நம்புகின்றனர். மேலும் புனித நீரில் நீராடினால் தனது பாவங்கள் தீரும் என மக்கள் நம்புகின்றனர்.

நீலபத்மநாபன் எழுதிய இலை உதிர்காலம் என்ற நாவலில் இராமலிங்கம் என்பர் வெகுநாட்களாக காசி. ஹரித்துவார் போன்ற இடங்களுக்கு போக ஆசைப்படுகின்றார். அதற்கான பல முயற்சிகள் செய்து அதில் வெற்றிப்பெற்றப்பின் தன் மரணத்தை எதிர்கொள்வதை ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

### நோய்

அறிவியல் உலகில் பல வளர்ச்சிகள் அடைந்த நிலைகளிலும் எயிட்ஸ். புற்றுநோய். மாரடைப்பு போன்ற நோய்களுக்கு மருந்துகள் கண்டுப்பிடிக்க முடியவில்லை. இதன் காரணமாக பல உயிர்களை இழக்க நேரிடுகிறது.

இலைஉதிர் காலம் என்ற நாவலில் வரும் சேதுபதியின் மகனுக்கு எயிட்ஸ் நோய் காரணமாக இறந்து விடுகிறான். அதை போன்று சின்னத்தம்பியின் அப்பாவிற்கு மாரடைப்புக் காரணமாக இறந்து விடுகிறார். இதை போன்றே இறப்புகள் இன்றும் உலகில் பல நோய்களினால் ஏற்படுவதை காணலாம்.

### மனவேதனை

கல்லூரியில் நடக்கும் கேலி கிண்டல் காரணமாக பல மாணவர்கள் தங்கள் உடலை தாங்களே மாய்த்து கொள்கிறார்கள். சில இடங்களில் கொலைச் செய்வதையும் காண முடிகிறது. இதனை அரசாங்கம் கட்டுபடுத்த முயன்ற போதும் இதில் முழுமையாக வெற்றிபெற முடியவில்லை. இதனால் பல மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

நீலபத்மநாபனின் இலை உதிர் காலம் என்ற நாவலில் வரும் தேவசகாயத்தின் மகன் பொறியியல் கல்லூரியில் படித்து வருகிறான். அங்கு அவனுக்கு சீனியர் மாணவர்களால் ராக்கிங் செய்யப்பட்டு கொலைச் செய்யப்படுகிறான். இதனை போன்ற நிகழ்வுகள் இன்றும் சமுதாயத்தில் அதிகமாகவே காணப்படுகிறது.

### முடிவுரை

நீல பத்மநாபன் எழுதிய இலை உதிர் காலம் என்ற நாவலின் மூலம் சமுதாயப் போக்கை தெரிந்து கொள்ள முடிகிறது. இன்றைய காலங்களிலும் இதே மாதிரியான சமுதாய நிலைமைகள் காணப்பட்டு வருகிறது.

### பார்வை நூல்

1. மா. இராமலிங்கம், நீல பத்மநாபன் எழுதிய இலை உதிர் காலம் என்ற நாவல் இலக்கியம்.